# பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்கள் இலங்கைக்கான விஜயத்தினை நிறைவுசெய்துள்ளனர்

**உடனடியாக வெளியிடுவதற்காக**

விஜயத்தின் நிறைவிலான பத்திரிகை வெளியீடுகள், பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழு நாட்டிற்கு விஜயம்செய்த பின்னர் கண்டறியப்பட்ட பூர்வாங்க விடயங்களைத் தெரிவிக்கின்ற கூற்றுக்களை உள்ளடக்குகின்றன. இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களேயன்றி, அவை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்தினைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

- *பன்னாட்டு நாணய நிதியத்தின் குழு, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் முதலாவது மீளாய்வை நியாயப்படுத்துகின்ற பொருளாதார செயலாற்றம் மற்றும் கொள்கைகள் பற்றி இலங்கை அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான அத்துடன் உற்பத்தித்திறன்வாய்ந்த கலந்துரையாடல்களை நடாத்தியது.*
- *இலங்கை மக்கள் குறிப்பிடத்தக்க ஆற்றல்வாய்ந்ததன்மையினைக் காண்பித்துள்ளதுடன் அதிகாரிகள் முக்கிய மறுசீரமைப்புக்கள் மீது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். அதன் கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மேலெழுவதற்கு இலங்கையினை இயலச்செய்வதற்குத் தேவையான மறுசீரமைப்பு உத்வேகத்தைப் பேணவல்ல அலுவலர் மட்ட இணக்கப்பாட்டை எய்துவதை நோக்கிய கலந்துரையாடல்கள் அண்மித்த காலத்தில் தொடர்ந்தும் இடம்பெறும்.*
- *பேரண்ட பொருளாதார உறுதிப்பாடு மற்றும் படுகடன் நிலைபெறுதன்மை என்பவற்றை மீளநிலைப்படுத்துவதில் பன்னாட்டு நாணய நிதியம் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்கள் தொடர்ந்தும் கவனம்செலுத்துகின்ற அதேவேளை, வறுமையான மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாத்து, நிதியியல் உறுதிப்பாட்டின் நலனைக்காத்து, அதேபோன்று ஊழல் பாதிக்கப்படும்தன்மைகளை தீர்த்து, இலங்கையின் வளர்ச்சி வாய்ப்பிற்கு வழியமைப்பதற்கான கட்டமைப்புசார்ந்த மறுசீரமைப்புக்களைத் தீவிரப்படுத்தும்.*

**கொழும்பு, இலங்கை – 2023 செத்தெம்பர் 27:** பீட்டர் பிரூவர் மற்றும் கற்ஷியாரினா ஸ்விறிட்செங்கா ஆகியோரின் தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியக் குழு, விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் நிகழ்ச்சித்திட்டம் பற்றி முதலாவது மீளாய்வின் ஒப்புதலுக்கு ஆதரவளிக்கும் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக 2023 செத்தெம்பர் 14 தொடக்கம் 27 வரையான காலப்பகுதியில் கொழும்பிற்கு விஜயம் செய்திருந்தது.

விஜயத்தின் முடிவில் பிரூவர் மற்றும் ஸ்விறிட்செங்கா ஆகியோர் பின்வரும் அறிக்கையினை வெளியிட்டிருக்கின்றனர்:

“பாரிய சவால்களை எதிர்கொள்வதில் இலங்கை மக்கள் குறிப்பிடத்தக்க தாக்குப்பிடிக்கும் தன்மையினை வெளிக்காட்டியுள்ளனர். கடினமான ஆனாலும் மிகவும் தேவையான மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. பொருளாதாரமானது உறுதிப்பாடு பற்றிய தற்காலிக சமிக்ஞைகளைக் காண்பிப்பதனால் இம்முயற்சிகள் ஆக்கபூர்வமானவையாக விளங்குகின்றன. பணவீக்கம், 2022 செத்தெம்பரில் 70

சதவீதம் கொண்ட உச்சத்திலிருந்து 2023 செத்தெம்பரில் 2 சதவீதத்திற்குக் கீழ் குறைவடைந்து, மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் இவ்வாண்டின் மாச்சு – யூன் காலப்பகுதியில் ஐ.அ.டொலா் 1.5 பில்லியனினால் அதிகரித்துள்ளதுடன் அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறை தளா்த்தப்பட்டுள்ளது. உறுதிப்படுத்தல் பற்றி முன்கூட்டிய சமிக்ஞைகளுக்கு மத்தியில் முழுமையான பொருளாதார மீட்சிக்கு இன்னும் உத்தரவாதமளிக்கப்படவில்லை. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் இரண்டாம் காலாண்டில் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, மிகவும் அடிக்கடியான பொருளாதாரக் குறிகாட்டிகள் கலந்த சமிக்ஞைகளைத் தொடா்ந்தும் வழங்குகின்றமையுடன் வளா்ச்சி உத்வேகம் குறைவடைந்தே காணப்படுகின்றது. அண்மைய மாதங்களில் ஒதுக்குத் திரட்டுதல் மெதுவடைந்துள்ளது.

“நீடித்திருக்கின்ற மீட்சி அத்துடன் உறுதியான மற்றும் அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற பொருளாதார வளா்ச்சி என்பவற்றை நோக்கிய பாதையில் பொருளாதாரத்தை இடம்பெறச்செய்வதற்கு மறுசீரமைப்பு உத்வேகத்தினை பேணவது மிகவும் முக்கியமாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாந்தர இலக்குகளை அதிகாரிகள் நிறைவுசெய்துள்ளதுடன் படுகடன் நிலைபெறுதன்மையினை மீளநிலைப்படுத்துவதற்கான அவா்களது முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இம்முக்கியமான அடிப்படை நடத்தைக்கு அா்ப்பணித்துள்ளனா். எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் வருமானத் திரட்டல் பெறுகைகள் மேம்பட்டுள்ள அதேவேளை, ஆண்டின் இறுதியளவில் தொடக்க எறிவுகளை விட ஏறத்தாழ 15 சதவீதத்தினால் பற்றாக்குறையாகவிருக்குமென எதிா்பாா்க்கப்படுகின்றது. இப்பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்கு முயற்சிகள் எதுவும் காணப்படவில்லையாயின், பொருளாதார காரணிகளின் காரணமாக பகுதியளவில் இறைச் சீராக்கத்தின் சுமை பொதுச் செலவினத்தின் மீதே இடம்பெறும். அத்தியாவசிய பொதுப் பணிகளை வழங்குவதற்கான அரசாங்கத்தின் இயலுமையினை இது நலிவடையச் செய்யக்கூடும் என்பதுடன் இதன் விளைவாக, படுகடன் நிலைபெறுதன்மைக்கான பாதைக்கு தீங்குவிளைவிக்கும். வருவாய்களையும் சிறந்த ஆளுகைக்கான சமிக்ஞைகளையும் அதிகரிப்பதற்கு வரி நிருவாகத்தை வலிமைப்படுத்துவதும் வரி விலக்களிப்புக்களை அகற்றுவதும் வரி ஏய்ப்புக்களை முனைப்புடன் இல்லாதொழிப்பதும் முக்கியமானதாகும்.

“தொடா்ச்சியான நிச்சயமின்மைக்கு எதிராக வலுவாக ஒதுக்குகளை ஒன்றுசோ்த்தல் மூலம் வெளிநாட்டுக் காப்புக்களை மீளக்கட்டியெழுப்புவதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல், நாணய நிதியிடலிலிருந்து தவிா்ந்துகொள்ளல் என்பவற்றில் இலங்கை மத்திய வங்கியின் வெற்றியினைக் கட்டியெழுப்புதல் பணவீக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு துணையளிக்கும். மின்சார விலையிடலில் செலவு மீட்பைப் பேணுவதை ஏனைய சவால்கள் உள்ளடக்குகின்றன.

“அரசாங்கமானது கட்டமைப்பு சாா்ந்த மறுசீரமைப்புக்கள் மீது நிலையான முன்னேற்றம் கண்டுள்ளது. புதிய மத்திய வங்கிச் சட்டம், ஊழலுக்கெதிரான சட்டம் உள்ளடங்கலாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய சட்டவாக்கங்கள் செயல்திறன்வாய்ந்த விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுமாயின் ஆளுகையினை மேம்படுத்தக்கூடும். ஆளுகையினை வலுப்படுத்துவதற்கான எதிா்கால மறுசீரமைப்பு வழிமுறைகளைப் பன்னாட்டு நாணய நிதிய ஆளுகை ஆய்வு அறிக்கை வெளியிடப்படுகின்ற போது தெரியப்படுத்தும். சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் இலக்கிடலை, போதுமையினை, உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதை நோக்காகக்கொள்கின்ற புதிய தகைமைப் பிரமாணத்துடன் சோ்த்து புதிய நலன்புரி நன்மைக் கொடுப்பனவுத் திட்டம் சட்டமாக்கப்பட்டுள்ளது. நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்யும் முகமாக வங்கி ஆய்ந்தறிதலை நடாத்துதல், வங்கித்தொழில் முறைமை மூலதனம் மற்றும் திரவத்தன்மை பற்றாக்குறை என்பவற்றைத் தீா்ப்பதற்கான வழிகாட்டலை உருவாக்குதல் மற்றும் வங்கித் தீா்மானக்கட்டமைப்பை மேம்படுத்தல் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

“உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பினை நிறைவேற்றுதல் அத்துடன் கடன்கொடுநா்களுடன் கலந்துரையாடல்களை முன்னேற்றமடையச் செய்தல் என்பனவூடாக படுகடன் நிலைபெறுதன்மையினை மீளப்பெறுவதன் மீதும் அதிகாரிகள் முன்னேற்றங் கண்டுள்ளனா். நிலுவைகளிலிருக்கின்ற அதன் பொதுப்படுகடனை இலங்கை மறுசீரமைக்கின்றது என்ற வகையில்

முதலாவது நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு பற்றிய நிறைவேற்றுச் சபையின் ஒப்புதல் நிதியிடல் உத்தரவாத மீளாய்வுகளைப் பூரணப்படுத்துவதை வேண்டிநிற்கின்றது. உரியகாலத்திலும் அத்துடன் நிகழ்ச்சித்திட்டத்தின் படுகடன் இலக்குகளுக்கமைவாகவும் அது நிறைவுசெய்யப்படும் என்ற நம்பிக்கையினை வழங்குவதற்கு படுகடன் மறுசீரமைப்பு பற்றி போதுமான முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளதா என்பதனையே இந்நிதியிடல் உத்தரவாத மீளாய்வுகள் மையப்படுத்தும்.

''கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுவருவதுடன் வருவாயைத் திரட்டும் இலக்குகள், ஊழலுக்கெதிரான முயற்சிகள் மற்றும் ஏனைய முக்கிய கட்டமைப்புசார்ந்த மறுசீரமைப்புக்கள் போன்றவற்றுக்கான அவர்களது திட்டங்கள் மீது அதிகாரிகள் தொடர்ந்தும் முன்னேற்றத்தினை முன்னெடுக்கின்றனர்.

''பன்னாட்டு நாணய நிதியக் குழு சனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க, இராஜாங்க அமைச்சர் திரு. செஹான் சேமசிங்க, சனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி திரு. சாகல ரத்நாயக்க, திறைசேரியின் செயலாளர் திரு. கே. எம். மஹிந்த சிறிவர்த்தன, ஏனைய மூத்த அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள், ஆகியோருடன் சந்திப்புக்களை நடாத்தியது. பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறை, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளையும் பன்னாட்டு நாணய நிதியக் குழு சந்தித்தது.

''விஜயத்தின் போது உன்னதமான ஒத்துழைப்பை வழங்கியமைக்காக அதிகாரிகளுக்கு நாம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அண்மைய காலத்தில் அலுவலர் மட்ட இணக்கப்பாட்டினை எய்தும் இலக்குடன் முதலாவது மீளாய்வைக் கொண்ட பின்னணியில் குழு அதன் கலந்துரையாடல்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும். இலங்கைக்கு இக்கட்டான இக்காலகட்டத்தில் ஆதரவளிப்பதற்கான எமது கடமைப்பொறுப்பினை நாம் மீள உறுதிப்படுத்துகின்றோம்.''